APPOLO STUDY CENTRE

# GROUP I MAIN – 2023

## SIMPLE INTEREST WORK SHEET

**SCHOOL BOOK SOURCE**

| | **Class** | | **Term** | |
|---|---|---|---|---|
| Simple Interest | 7 | OLD | 3 | 2.5 |
| | 7 | NEW | 3 | 2.4, 2.5 |

Interest which is calculated uniformly on the original principal throughout the loan period is called Simple Interest.

i. Simple interest: $I = \frac{PNR}{100}$

P = Principal
N = period
R = Rate of interest

ii. Amount: $A = P + I$

கடன் காலம் முழுவதும் கடனாய் கொடுக்கப்பட்ட அசலில் சீராய் கணக்கிடப்படும் வட்டி தனி வட்டியாகும்.

i. தனி வட்டி $I = \frac{PNR}{100}$

P = அசல்
N = காலம்
R = வட்டி வீதம்

ii. மொத்த தொகை $A = P + I$

1. A sum of Rs. 800 is lent for one year at the rate of 18% per annum. Find the simple interest.
   ரூ. 800 எனும் தொகை ஒரு வருட காலத்திற்கு 18% ஆண்டு வட்டியில் கடனாய் வழங்கப்படுகின்றது. தனிவட்டித் தொகையை காண்க.

2. A sum of Rs. 46000 was lent out a simple interest at the rate of 18% per year. Find the interest at the end of 1 year and 9 months.
   ரூ.46,000 எனும் தொகை ஓராண்டிற்கு 18% எனும் தனி வட்டியில் கடனாய் வழங்கப்படுகின்றது. 1 வருடம் 9 மாதங்கள் இறுதியில் பெருகும் வட்டித்தொகையை காண்க.

3. Find the simple interest on Rs. 1000 for 6 months at the rate of 5 paise per rupee per month.
ஒரு மாதத்திற்கு ஒரு ரூபாய்க்கு 5 பைசா எனும் வட்டி விகிதத்தில் ரூ. 1000, 6 மாதத்தில் கொடுக்கும் தனி வட்டித்தொகையை காண்க.

4. Find the simple interest when principal is Rs. 12000, rate of interest is 18% per annum and time is 4 months.
18% ஆண்டு வட்டி வீதத்தில் ரூ. 12,000, 4 மாதத்தில் கொடுக்கும் தனி வட்டித்தொகையை காண்க.

5. Find the simple interest when principal is Rs. 1000, rate of interest is 10% per annum and time is 73 days.
10% ஆண்டு வட்டி வீதத்தில் ரூ. 1000, 73 நாட்களின் கொடுக்கும் தனி வட்டித்தொகையை காண்க.

6. Find the simple interest when principal is Rs. 500, rate of interest is 12.5% and time 4 years.
12.5% எனும் வட்டி வீதத்தில்ரூ.500,4 வருடங்களில் கொடுக்கும் தனி வட்டித்தொகையை காண்க.

7. Kumar has paid simple interest on a certain sum for 2 years at 10% per annum is Rs. 750. Find the sum.
குமார் ஒரு தொகைக்கு 10% ஆண்டு வட்டியில் 2 வருடங்களுக்கு செலுத்திய தனிவட்டித்தொகை ரூ.750 அத்தொகையை காண்க.

8. If interest on Rs. $x$ for 2 years at R% per annum is Rs. 80, then find the interest on Rs. $2x$ for one year at R% per annum.
ரூ.x, R % ஆண்டு வட்டியில் 2 வருடங்களில் கொடுக்கும் வட்டி ரூ. 80 எனில் ரூ.2x R% ஆண்டு வட்டியில் ஒரு வருடத்தில் கொடுக்கும் வட்டித்தொகையைக் காண்க

9. Find the interest on Rs. 1460 at 10% from 5th Feb, 1992 to 25th April 1992.
ரூ. 1460 க்கு, 10% வீதத்தில் 5 பிப்ரவரி 1992 லிருந்து 25 ஏப்ரல் 1992 வரை உள்ள காலத்திற்கான வட்டித்தொகையைக் காண்க.

10. Kumar borrowed Rs. 400 from his friend at the rate of 12% per annum for 2 ½ years. Find the interest and amount paid by him.
குமார் ரூ.400 யை தன் நண்பரிடமிருந்து 2 ½ வருடங்களுக்கு 12% ஆண்டு வட்டியில் கடனாய் பெறுகின்றார். அவர் செலுத்திய வட்டித்தொகையையும் மொத்த தொகையையும் காண்க.

11. Find the difference between the interest obtained for Rs. 1000 at 12% per annum for 3 years and that for Rs. 1500 at 8% per annum for 1 ½ years.
ரூ.1000, 12% ஆண்டு வட்டி வீதத்தில் 3 வருடங்களில் கொடுக்கும் வட்டித்தொகைக்கும் ரூ. 1500, 8% ஆண்டு வட்டி வீதத்தில் 1 ½ வருடங்களில் கொடுக்கும் வட்டித்தொகைக்கும் உள்ள வித்தியாசம் காண்க:

12. What principal will amount to Rs. 900 in 6 years at 10% simple interest?
எந்த அசலானது 10% தனிவட்டியில் 6 வருடங்களில் ரூ. 900 ஆக உயரும்.

13. A principal becomes Rs. 10050 at the rate of 10% in 5 years. Find the principal.
ஒரு அசலானது 10% வீதத்தில் 5 வருடங்களில் ரூ.10,050 ஆகின்றது. அசலைக் காண்க.

14. Kumar deposited Rs. 20000 in a financial institution on 28th March 2000 and closes his account on 21st August 2000. If the constitution pays an interest of 9% per annum, what amount does Kumar get?
குமார் ஒரு நிதி நிறுவனத்தில் 28 மார்ச் 2000 அன்று ரூ.20,000 வைப்பு நிதியாக செலுத்துகின்றார். மற்றும் 21 ஆகஸ்ட் 2000 அன்று தனது கணக்கை முடிக்கின்றார். அந்நிறுவனம் ஆண்டுக்கு 9% என வட்டி வழங்கினால் குமார் பெறும் தொகையை காண்க?

15. A man borrowed Rs. 16000 from two persons. He paid 6% interest to one and 10% per annum to the other. In one year he paid total interest Rs. 1120. How much did he borrow at each rate?
ஒரு மனிதன் இரண்டு நபர்களிடமிருந்து ரூ.16000 யை கடனாய் பெறுகின்றார். அவர் ஒருவருக்கு 6% மற்றொருவருக்கு 10% எனும் ஆண்டு வட்டியில் வட்டி செலுத்துகின்றார். ஒரு வருடத்திற்கு அவர் செலுத்திய மொத்த வட்டித்தொகை ரூ. 1120, ஒவ்வொரு வட்டி வீதத்தில் அவர் பெற்றத்தொகையைக் காண்க?

16. Find the amount on Rs. 25000 at 8% per annum for 6 years under simple interest.
ரூ. 25,000 தனி வட்டியில் 6 வருடங்களில் 8% ஆண்டு வட்டியில் கொடுக்கும் மொத்த தொகையைக் காண்க:

17. A sum when reckoned simple interest at 3 ½ % per annum amounts to Rs. 364.80 after 4 years. Find the sum.
ஒரு தொகை 3 ½ % ஆண்டு தனி வட்டியில் கணக்கிடப்படும் பொழுது 4 வருடங்களில் ரூ. 364.80 ஆக உயர்கின்றது. அத்தொகையை காண்க?

18. Rs. 12000 is lent out in three parts. The first part is lent at 4% per annum for 5 years, the second at 5% for 3years and the third at 3% for 4 years. The total interest earned on each part are equal. Find the sum in each part.
ரூ. 12000 மூன்று பகுதிகளாய் கடனாய் வழங்கப்படுகின்றது. முதல் பகுதி 4% ஆண்டு வட்டியில் 5 வருடங்களுக்கும், இரண்டாம் பகுதி 5% 3 வருடங்களுக்கும் மற்றும் மூன்றாம் பகுதி 3% 4 வருடங்களுக்கும் கடனாய் வழங்கப்படுகின்றது. ஒவ்வொன்றிலும் பெற்ற மொத்த வட்டித்தொகை சமம் எனில், ஒவ்வொரு பகுதியின் தொகையை காண்க?

19. A farmer borrowed Rs. 2400 at 12% interest per annum. At the end of 2 ½ years, he cleared his account by paying Rs. 1200 and a cow. Find the cost of cow.
ஒரு விவசாயி 12% ஆண்டு வட்டியில் ரூ.2400யை கடனாய் பெறுகின்றார். 2 ½ வருட இறுதியில் அவர் ரூ.1200 யும் ஒரு பசுவையும் கொடுத்து கடனை அடைக்கின்றார். பசுவின் விலையைக் காண்க.

20. Kumar borrowed Rs. 52000 from a money lender at a particular rate of simple interest. After 4 years, he paid Rs. 79040 to settle his dept. At what rate of interest he borrowed the money?
குமார் ஒரு வட்டிக்கடைக்காரனிடமிருந்து ஒரு குறிப்பிட்ட தனி வட்டி வீதத்தில் 4 வருடங்களுக்கு ரூ. 52000 த்தை கடனாய் பெறுகின்றார். அவர் ரூ. 79040 யை செலுத்தி அவர் கடனை அடைக்கின்றார். எந்த வட்டி வீதத்தில் அவர் கடனைப் பெற்றார்.?

21. Ram lent Rs. 1200 to Kumar for 5 years and Rs. 1500 to Mohan for 2 years and received altogether Rs. 900 as interest. Find the rate per annum.
ராம் ரூ.1200 யை 5 வருடங்களுக்கு குமாருக்கு கடனாய் வழங்கினார் மற்றும் ரூ. 1500யை 2 வருடங்களுக்கு மோகனிடம் கடனாய் வழங்கினார். அவர் பெற்ற மொத்த வட்டித்தொகை ரூ.900 ஆண்டு வட்டி வீதம் காண்க?

22. Find the interest on Rs. 1200 at 6% per annum for 146 days.
6% ஆண்டு வட்டியில் ரூ. 1200 க்கு 146 நாட்களுக்கான வட்டித் தொகையைக் காண்க,

23. A sum of money doubles itself in 8 years. What is the rate of interest?
ஒரு குறிப்பிட்ட தொகை 8 வருடங்களில் இரட்டிக்கின்றது. வட்டி வீதம் காண்க.

24. In how many years will be Rs. 750 amount to Rs. 900 at 4% per annum?
எத்தனை வருடங்களில் ரூ.750, 4% ஆண்டு வட்டியில் ரூ.900 ஆக உயரும்.

25. In how many years will a certain sum becomes 3 times itself at 25% per annum under simple interest.
ஒரு தொகை எத்தனை வருடத்தில் 25% ஆண்டு தனி வட்டி வீதத்தில் 3 மடங்காகும்.

26. In what time will Rs. 6000 amount to Rs. 7200 at 4% per annum?
எத்தனை காலத்தில் 4% ஆண்டு வட்டியில் ரூ.6000, ரூ. 7200 ஆக உயரும்.

27. A borrowed Rs. 1500 at 4% per annum and Rs. 1400 at 5% per annum for the same period. He paid Rs. 390 as total interest. Find the time for which he borrowed the money.
A 4%ஆண்டு வட்டியில் ரூ.1500 யும் 5% ஆண்டு வட்டியில் ரூ.1400 யும் ஒரே காலத்திற்கு கடனாய் பெறுகின்றார். அவர் செலுத்திய மொத்த வட்டித்தொகை ரூ.390. எந்த காலத்திற்கு அவர் தொகைகளை கடனாய் பெற்றார்.

28. The interest on Rs. 2000 is less than the interest on Rs. 2500 at 5% by Rs. 50. Find the time.
5% வட்டியில் ரூ.2000 கொடுக்கும் வட்டித்தொகை ரூ. 2500 கொடுக்கும் வட்டித்தொகையை விட ரூ. 50 குறைவு. காலத்தை காண்க.

29. A certain sum of money amounts to Rs. 4720 in 3 years at 6% per annum simple interest. In how many years will it amount to Rs. 5680 at the same rate of interest.
ஒரு குறிப்பிட்ட தொகை 6% ஆண்டு தனிவட்டியில் 3 வருடங்களில் ரூ.4720 ஆக உயர்கின்றது. எத்தனை வருடங்களில் அதே வட்டி வீதத்தில் ரூ.5680 ஆக உயரும்?

30. When a bank reduces the rate of interest from 5% to 4% per annum, Ram withdraw Rs. 500 from his account. If he now gets Rs. 35 less interest during one year, find how much total money was there in Ram's account initially?
ஒரு வங்கி வட்டி வீதத்தை 5% லிருந்து 4% ஆண்டு வட்டியாக குறைக்கும் பொழுது ராம் தனது வங்கி கணக்கிலிருந்து ரூ.500 திரும்ப பெறுகின்றார். தற்போது ஒரு வருடத்தில் ரூ.35 குறைவான வட்டி பெறுகின்றார். ராம் கணக்கில் முதலில் மொத்தம் எவ்வளவு பணம் இருந்தது?

31. Find the annual instalment will discharge a dept of Rs. 12900 due in 4 years at 5% per annum Simple interest.
எந்த வருடாந்திர தவணையை செலுத்தி 5% ஆண்டு தனி வட்டியில் 4 வருடங்களில் ரூ.12900 எனும் கடனை விடுவிப்பார்?

32. In how many years will a sum of money double itself at 5% rate of interest?
எத்தனை வருடத்தில் 5% வட்டி வீதத்தில் ஒரு தொகை இரட்டிப்பாகும்?

33. At what rate of interest will a sum of money becomes $\frac{11}{10}$ times in 5 years?
எந்த வட்டி வீதத்தில் 5 வருடங்களில் ஒரு தொகை $\frac{11}{10}$ மடங்காகும்?